

# புதுநெறி காட்டிய பாரதி

ஓம் சக்தி

# புதுநெறி காட்டிய பாரதி

சீனி. விசுவநாதன்

வெளியீட்டாளர் :

**சீனி. விசுவநாதன்**

2, மாடல் ஹவுஸ் லேன், சி. ஐ. டி. நகர்,

சென்னை-600 035

## இந்த நூல் ...

முன்னைப் பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும் பொற் பாலமாக விளங்கிய மகா ஞானி பாரதி என்பதால், அவரைத் தமிழ் உலகம் ''புதுநெறி காட்டிய பாரதி'' என்றே போற்றிக் கொண்டாடி மகிழ்கின்றது.

பாடல்களில் எத்துணை உயர்வான — தெளிந்த கருத்துக்களைப் பாரதியார் சொல்லி உள்ளாரோ, அத்துணைக்கு அத்துணை ஈடாகவும் எடுப்பாகவும் உரைநடையிலேயும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

பாரதியின் பாட்டுத் திறத்தைப் போன்றே உரைநடையும் வளம் வாய்ந்தது; வன்மை கொண்டது.

பாரதி இயலின் ஆய்வுப் பரப்பை விரிவாக்க வேண்டுமானால், கவிதை—உரைநடை இரண்டுமே சரிவரக் காட்டப்பட வேண்டும்.

பாரதியின் கவிதைகளைப் படித்து இன்புறுவதைப் போலவே, அவருடைய வசனங்களையும் சுவைத்துப் பயன் பெறவேண்டும் என்கிற கருத்தை அடிப்படையாகக் கொண்டு உருப்பெற்றதே இந்த நூல்.

ஆக, பாரதியை மிக ஆழமாகவும், மிகமிக நுணுக்கமாகவும் பயில வேண்டும் என்பதற்காகவே அவருடைய பன்முக முயற்சிகளை — ஆக்கபூர்வமான பணிகளை — திட்டமிட்ட செயல்பாடுகளை — நம்பகமான செய்திகளைக் கொண்டு விளக்குகின்றது இந்த நூல்.

எம். கே. கலர் பிராஸஸ், சென்னை-14.
போன் : 841478